සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**62 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2014 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2014 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2014**

| | | |
|---|---|---|
| පුරවැසි අධ්‍යාපනය හා ප්‍රජා පාලනය | I, II | පැය තුනයි |
| **குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம்** | **I, II** | **மூன்று மணித்தியாலம்** |
| Citizenship Education & Governance | I, II | *Three hours* |

**சுட்டெண் :..............................**

## (62) குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் I

* இவ்வினாத்தாள் **40** வினாக்களைக் கொண்டுள்ளது.
* ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப **எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.**

● **1** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிந்தெடுத்து, **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

1. நாட்டின் அரசியல் யாப்பு ............................................................ சட்டம் என அழைக்கப்படும்.
(சிவில் / அடிப்படை / நிருவாக)

2. அரசொன்றின் நிருவாகச் செயற்பாடுகளை வழிப்படுத்தும் பிரதான நிறுவனம் ................................ ஆகும்.
(பாராளுமன்றம் / மந்திரிசபை / அரசாங்கம்)

3. அரசியல் அமைப்புச் சபை ............................................... எனவும் அழைக்கப்படும்.
(அமைச்சரவை / அரசாங்கக் கட்சி / பாராளுமன்றம்)

4. ஒரு கலாசாரத்தின் சில பண்புகள் மற்றொரு கலாசாரத்தினுள் பரவுதல் ...................................... என அழைக்கப்படும்.
(பரவல் / பூகோளமயமாதல் / குடிபெயர்தல்)

5. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பிரதான சட்ட அதிகாரி ...................................... ஆவார்.
(சட்டமா அதிபர் / பிரதம நீதியரசர் / சபாநாயகர்)

6. ஒரு நிருவாக அமைப்பினுள் வெவ்வேறு மொழிகளைப் பேசுகின்ற, வெவ்வேறு சமயங்களைப் பின்பற்றுகின்ற, வெவ்வேறு பழக்கவழக்கங்களைக் கொண்ட மக்கள் உள்ள ஒரு சமூகம் ........................................... சமூகம் என அழைக்கப்படும்.
(பல்லின / பல்கலாசார / பல்வகை)

7. உற்பத்திச் செயன்முறைக்காக மனிதனால் பயன்படுத்தப்படுகின்ற உற்பத்தித் துணைச்சாதனங்களை ................ என்பர்.
(உபகரணங்கள் / கருவிகள் / மூலதனம்)

8. மத்திய அரசிற்கும் மாகாண சபைகளுக்கும் சமமாக அனுபவிக்கக் கூடிய அதிகாரங்கள் ...................................... பட்டியலில் காட்டப்பட்டுள்ளன.
(திறந்த / ஒத்தியங்கும் / ஒதுக்கப்பட்ட )

9. பொதுமக்களுக்கு மேலும் பயனுறுதியுள்ளதும் விரைவானதுமான சேவையொன்றினை வழங்கும் நோக்கத்துடன் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ............................................. எண்ணக்கரு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
(நல்லாட்சி / வினைத்திறன் மிக்க / பாராபட்சமற்ற)

10. சுற்றாடலில் காணப்படும் தாவரங்களும் விலங்குகளும் ........................................... என்ற வகையில் அடங்கும்.
(உயிரியல் வளங்கள் / உயிரற்ற வளங்கள் / சூழல் வளங்கள்)

[பக். 2 ஐப் பார்க்க

● **11** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு கூற்றும் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் எதிரிலுள்ள **அடைப்புக்குறியினுள்** குறிப்பிடுக.

11. 'தேசவழமைச் சட்டம்' மலைநாட்டு பெருந்தோட்டத்துறை மக்களுக்கான சட்டமாகும். (..........)

12. இலங்கை அரசியல் அமைப்புச் சட்டத்தின் 13ஆம் திருத்தத்தின் மூலம் மாகாண சபைகள் நிறுவப்பட்டுள்ளன. (..........)

13. மானிட வறுமை சுட்டெண்ணைத் தயாரிக்கும் நியதியாகக் கொள்வனவுச் சக்தி பயன்படும். (..........)

14. வேலை நிறுத்தத்தினால் தேசிய பொருளாதாரத்திற்கு தீங்கு ஏற்படும் சமயத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளைக் கைவிடுவதற்குக் கட்டளை இடும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு. (..........)

15. மக்கள் அபிப்பிராயத்தைக் கோரும் முறை 1978 ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் மூலம் இலங்கைக்கு அறிமுகஞ் செய்யப்பட்டது. (..........)

16. சகல காணி வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கு உண்டு. (..........)

17. சட்டத்தின் அடிப்படை நோக்கம் மக்களுக்கு நியாயம் வழங்குவதாகும். (..........)

18. 1978 ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பின்படி சட்டவாக்க சபை ஒரு தனி சபையாகும். (..........)

19. நாடுகளுக்கிடையில் சமாதானமான தொடர்புகளைப் பேணுவதற்காக சமாதானப் படைகளைப் பயன்படுத்துவர். (..........)

20. அரசினால் முன்வைக்கப்படுகின்றனவும் செயற்படுத்தப்படுகின்றனவுமான விதிமுறைகள், ஒழுங்குவிதிகள், சம்பிரதாயங்கள் ஆகியவை சட்டங்கள் எனப்படும். (..........)

● **21** தொடக்கம் **30** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமுரிய விடையைப் **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

21. ஒரு நபர் அல்லது ஒரு குழுவினர் சமுதாயத்தில் புரியும் குற்றங்கள் தொடர்பாக செல்வாக்குச் செலுத்தும் சட்டத்தை எப்பெயரால் அழைப்பர் ?

..............................................................................................................................

22. ஜோன் கல்டுங்கின் மோதல் முக்கோணத்தின்படி கட்டமைப்பு, மனப்பாங்கு மற்றும் .................................. என்னும் மோதலை ஏற்படுத்துவது தொடர்பான மூன்று சந்தர்ப்பங்கள் காட்டப்பட்டுள்ளன.

23. உரிமைகள், சமத்துவம் மற்றும் .................................. என்பன ஜனநாயகத்தின் அடிப்படையாகக் கருதப்படுகிறது.

24. அரசின் நிருவாக அதிகாரங்களை மாத்திரம் பிரதேச மட்டத்தில் கையளிக்கும் செயன்முறையைக் குறிக்கும் பெயர் என்ன ?

..............................................................................................................................

25. ஒரு மாகாண சபையின் பெயரளவிலான அதிகாரி யாரால் நியமிக்கப்படுவார் ?

..............................................................................................................................

26. அரசிடம் உள்ள உற்பத்தி வளங்களைச் சமூக நலன் அதி உயர் மட்டத்தில் அமையுமாறு வழிப்படுத்தும் பொருளாதார முறை எப்பெயரால் அழைக்கப்படும் ?

..............................................................................................................................

27. மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணின்படி குறைந்த அபிவிருத்தி மட்டத்திலுள்ள நாடுகளில் பெரும்பாலானவை .................................. கண்டத்தில் அமைந்திருக்கின்றன.

[பக். 3 ஐப் பார்க்க

28. கைத்தொழில் பிணக்குச் சட்டத்தில் 15 (அ) முதல் 21 வரையான உறுப்புரைகளில் விவரிக்கப்பட்டுள்ளதன்படி தொழில் தொடர்பான சச்சரவுகளை சமநிலைப்படுத்தும் செயன்முறை ………………………………… எனப்படும்.

29. வெளிநாட்டு தேறிய காரணி வருமானத்தைக் கவனத்திற் கொண்டதன் பின்னர் ஒரு நாட்டில் ஓர் ஆண்டு காலப்பகுதியினுள் உற்பத்தி செய்யப்படும் சகல பொருள்கள், சேவைகளினதும் மொத்தப் பெறுமதி எப்பெயரால் அழைக்கப்படும் ?

……………………………………………………………………………………

30. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஒன்றுசேர்ந்து தமது பாதுகாப்பிற்காக அமைத்துக் கொண்ட முதலாவது பிராந்திய பாதுகாப்பு அமைப்பு எது ?

……………………………………………………………………………………

● **31** தொடக்கம் **40** வரையான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை எதிரிலுள்ள **அடைப்புக்குறியினுள்** எழுதுக.

31. ஒரு நாட்டிலுள்ள சகல பிரஜைகளும் ஒன்றுகூடி நிர்வாக வேலைகள் தொடர்பாக தீர்மானம் எடுத்தல்,
(1) பிரதிநிதித்துவ ஜனநாயகம் ஆகும். (2) நேரடி ஜனநாயகம் ஆகும்.
(3) மறைமுக ஜனநாயகம் ஆகும். (4) யாப்பு அடிப்படையிலான ஜனநாயகமாகும். (……)

32. "நாட்டில் பல இனங்கள் வாழ்ந்த போதிலும் அவர்கள் தம்மை ஒரு தேசிய இனமாகக் கருதுதல் வேண்டும்" எனும் கருத்தினால் உருவான அரசியல் எண்ணக்கரு,
(1) மானிடக் கொள்கையாகும். (2) லிபரல் கொள்கையாகும்.
(3) பூகோளமயமாதலாகும். (4) தேசிய அரசாங்கமாகும். (……)

33. சந்தைப் பொருளாதாரம் ஒன்றின் பிரதான இயல்பாவது,
(1) உற்பத்திச் செயன்முறையின்போது எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள் தொடர்பில் கவனம் செலுத்துவதாகும்.
(2) சந்தைச் செயற்பாடுகளில் அரசு தலையிடுவதாகும்.
(3) பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கும்போது கேள்வி, வழங்கல் சக்திகளின் அடிப்படையில் கிடைக்கும் விலைக்கேற்ப தீர்மானம் எடுத்தலாகும்.
(4) மக்கள் நலனைக் கருத்திற் கொண்ட பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு முன்னுரிமை அளித்தல் ஆகும். (……)

34. கடந்த சில ஆண்டுகளாக உலகப் பொருளாதாரத்தில் உற்பத்தித்துறையில் ஏற்பட்ட பூகோளமயமாதலில் வெளிப்படையாகத் தெரியக்கூடிய போக்காக அமைந்தது,
(1) நாடுகளுக்கிடையே வர்த்தக ஒப்பந்தங்களும் வலய அமைப்புகளும் உருவானமையாகும்.
(2) உற்பத்திக் கிரயம் பெரியளவில் அதிகரித்தமையாகும்.
(3) ஐரோப்பாவின் பெரும்பாலான நாடுகளிலும் ஐக்கிய அமெரிக்காவிலும் ஜப்பானிலும் ஏற்பட்ட பல்தேசியக் கம்பனிகளின் விருத்தியாகும்.
(4) பல நாடுகள் சர்வதேச வர்த்தகத்தின்போது பொதுவான நாணய அலகுப் பாவனையில் ஈடுபடுகின்றமையாகும். (……)

35. முரண்பாடுகளை அல்லது மோதல்களைத் தீர்ப்பதற்கு ஒரு நபரிடம் இருக்க வேண்டிய அடிப்படைத் திறன்கள்,
(1) மோதல் பகுப்பாய்வு, மாற்றுக் கருத்து, பேச்சுவார்த்தை, நடுநிலைப்படுத்தல் ஆகியனவாகும்.
(2) மோதல் பகுப்பாய்வு, செவிமடுத்தல், நடுநிலைப்படுத்தல், பேச்சுவார்த்தை ஆகியனவாகும்.
(3) மோதல் பகுப்பாய்வு, மாற்றுக்கருத்து, பேச்சுவார்த்தை, கீழ்ப்படிதல் ஆகியனவாகும்.
(4) மோதல் பகுப்பாய்வு, செவிமடுத்தல், பேச்சுவார்த்தை, பணிவு ஆகியனவாகும். (……)

36. இலங்கையைத் தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கும்போது கவனத்திற் கொள்ளப்படுகின்ற பிரதான நியதிகள் அடங்கும் விடை எது ?
(1) நிலப்பரப்பு, வாக்கு எண்ணிக்கை, மக்கள் கட்டமைப்பு
(2) நிலப்பரப்பு, மக்கள் அடர்த்தி, மக்கள் கட்டமைப்பு
(3) மக்கள் கட்டமைப்பு, மக்கள் அடர்த்தி, மக்கள் விகிதம்
(4) நிலப்பரப்பு, வாக்கு எண்ணிக்கை, மக்கள் அடர்த்தி (……)

[பக். 4 ஐப் பார்க்க

இங்கே வெட்டி அகற்றவும்

37. ஒரு நாட்டில் சட்டம் அமுலாக ஆரம்பிப்பது,
(1) பாராளுமன்றத்தில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஆகும்.
(2) பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டம் ஜனாதிபதியால் ஒப்பமிடப்பட்ட பின்னர் ஆகும்.
(3) பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டம் சபாநாயகரால் ஒப்பமிடப்பட்ட பின்னர் ஆகும். (……)
(4) சட்டமொன்றுக்கு உயர் நீதிமன்றத்தின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் ஆகும்.

38. பின்வருவனவற்றுள் சூழல் பிரச்சினைகள் ஏற்படுவது தொடர்பில் செல்வாக்குச் செலுத்தும் அடிப்படைக் காரணமாக எதனைக் கருதலாம் ?
(1) சுற்றாடலில் கழிவுப்பொருள் இடப்படுதல்
(2) மக்கள் மத்தியில் சுற்றாடல் பற்றிய நல் அபிப்பிராயம் நிலவாமை
(3) சுற்றாடல் வளங்கள் வரையறுக்கப்படாத வகையில் பயன்படுத்தப்படல் (……)
(4) சூழல் தொடர்பான போதியளவு சட்டங்கள் இல்லாமை

39. எழுத்தறிவு, பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்ப்பு, கொள்வனவுச் சக்தி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படும் சுட்டெண் எது ?
(1) மானிட வறுமைச் சுட்டெண் (2) மானிட அமுக்கச் சுட்டெண் (……)
(3) பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண் (4) மானிட அபிவிருத்திச் சுட்டெண்

40. பின்வருவனவற்றுள் இலங்கையர் ஒருவர் மனித உரிமைகள் மீறப்படல் தொடர்பாக முறைப்பாடு செய்யக்கூடிய உயர் சர்வதேச நிறுவனம் எது ?
(1) ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு (2) சர்வதேச நீதிமன்றம் (……)
(3) சர்வதேச தொழிலாளர் அமைப்பு (4) ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை

**

The National e-learning Portal for The General Education

[பக். 5 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

62 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2014 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2014 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2014

පුරවැසි අධ්‍යාපනය හා ප්‍රජා පාලනය I, II
குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் I, II
Citizenship Education & Governance I, II

32676

## (62) குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் II

* **முதலாம்** வினா கட்டாயமானதாகும்.
* **முதலாம்** வினாவும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**1.** (i) இன்று உலக நாடுகளில் நேரடி ஜனநாயகம் செயற்படாமைக்கான **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக.
(ii) 'வேற்றுமையில் ஒற்றுமை' என்பதை தொனிப்பொருளாகக் கொண்டு அபிவிருத்தி அடைந்த **இரண்டு** நாடுகளைப் பெயரிடுக.
(iii) தேசிய அரசுகள் உருவாவதற்கு ஏதுவான சிறப்புக் காரணிகள் **இரண்டை** எழுதுக.
(iv) கூட்டாட்சி முறையொன்றின் **இரண்டு** இயல்புகளைக் குறிப்பிடுக.
(v) எந்தவொரு பொருளாதார முறையிலும் இடம்பெறும் பிரதான செயன்முறைகள் மூன்றாகும். அவற்றுள் **இரண்டைப்** பெயரிடுக.
(vi) இலங்கையில் சட்டத்துறைக்கு உரித்தான அதிகாரங்கள் மற்றும் பணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.
(vii) அரசாங்கமொன்றின் பிரதான **இரண்டு** பகுதிகளைப் பெயரிடுக.
(viii) உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நடாத்தப்பட்ட வரலாற்றுரீதியான புரட்சிகள் **இரண்டைப்** பெயரிடுக.
(ix) சார்க் அமைப்பைச் சேர்ந்த இலங்கை அல்லாத வேறு நாடுகள் **இரண்டைப்** பெயரிடுக.
(x) சர்வதேச தொடர்புகள் பேணப்படுகின்ற பிரதான **இரண்டு** அம்சங்களும் எவை ?
(02 × 10 = 20 புள்ளிகள்)

**2.** மக்களால் மக்களுக்காக நடத்தப்படுகின்ற மக்களாட்சி ஜனநாயக ஆட்சியாகும்.
(i) கடந்த காலங்களில் இலங்கையில் நிலவிய அரச நிருவாக முறைகளில் ஜனநாயகப் பண்புகள் நிலவின என்பதனை எடுத்துக்காட்ட **இரண்டு** உதாரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(ii) ஜனநாயக ஆட்சி முறையொன்றில் காணப்படும் பிரதான **மூன்று** அம்சங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
(iii) (a) அரசாங்க ஆட்சி முறைகள் **இரண்டைப்** பெயரிடுக.
(b) நீர் பெயரிட்ட ஓர் அரசாங்க ஆட்சி முறையின் **மூன்று** இயல்புகளைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

**3.** இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொரு நபருக்கும் சமமான உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் உரித்துண்டு.
(i) (a) சிவில் மற்றும் அரசியல் உரிமைகளாகக் கருதப்படும் உரிமையொன்றைப் பெயரிடுக.
(b) பொருளாதார மற்றும் சமூக உரிமைகளாகக் கருதப்படுகின்ற உரிமையொன்றைப் பெயரிடுக.
(02 புள்ளிகள்)
(ii) சிறுவர் உரிமைகள் சாசனத்தைத் தயாரிக்கும்போது விசேட கவனம் செலுத்தப்பட்ட **மூன்று** துறைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
(iii) ஜனநாயக சமுதாயமொன்றின் பிரஜை என்ற வகையில் உம்மால் நிறைவேற்றப்பட வேண்டிய ஒழுக்க ரீதியான கடமைகள் **மூன்றைப்** பெயரிட்டு, அவற்றில் **ஒன்றைச்** சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

**4.** ஒரு நாட்டின் அபிவிருத்திச் செயன்முறை பின்னடைவதில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு முக்கிய காரணி மோதலாகும்.

(i) மோதல் ஏற்பட ஏதுவாகும் **இரண்டு** மூலங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) மோதல் ஒன்றைத் தீர்ப்பதற்கான நடுநிலையாளர் என்ற வகையில் ஒருவர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) மோதல் காரணமாக நாட்டின் அபிவிருத்திச் செயன்முறையின் மீது பாதிப்புகள் ஏற்படும் விதத்தை **மூன்று** காரணிகளின் துணையுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

**5.** பல்வகைமையுடைய உயிரின வளங்களின் பெறுமானம் அல்லது பண்புகள் குறைவடைதல் உயிரின வளங்களின் அழிவடைதல் எனப்படும்.

(i) உயிரின வளங்களின் அழிவடைதல் ஏற்படும் **இரண்டு** சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) வளி மாசடையும் **மூன்று** முறைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) சிறந்த சுற்றாடலைப் பேணுவதற்காக பிரஜை என்ற ரீதியில் உம்மால் பின்பற்றக்கூடிய **மூன்று** நடைமுறைகளை விளக்குக. (05 புள்ளிகள்)

**6.** நாடுகளுக்கிடையே நிலவும் எல்லா வகையான தொடர்புகளும் சர்வதேசத் தொடர்புகள் எனப்படும்.

(i) சர்வதேசத் தொடர்புகளுக்கு அடிப்படையாகின்ற **இரண்டு** காரணிகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) பலம் வாய்ந்த நாடுகள் பலவீனமான நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்தும் **மூன்று** துறைகளைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(iii) உலகிலுள்ள பலம் வாய்ந்த நாடுகளினால் இலங்கையின் மீது ஏற்படுத்தப்படும் சாதகமான செல்வாக்கொன்றையும் பாதகமான செல்வாக்கொன்றையும் உதாரணங்கள் தந்து விளக்குக. (05 புள்ளிகள்)

**7.** தொழினுட்ப அபிவிருத்தியானது மனித செயற்பாடுகளை இலகுவாகச் செய்துகொள்ள பெரும் உதவியாயமையும் அதேசமயம் சமூகத்தின் நல் நிலவுகையின் மீது பாதிப்பாயமையும் சந்தர்ப்பங்களையும் காணலாம்.

(i) தற்காலத்தில் இலங்கையில் தொழினுட்பம் பரவலாகப் பயன்படுத்தப்படும் **இரண்டு** துறைகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) நீர் பெயரிட்ட ஒரு துறையில், தொழினுட்பத்தைப் பயன்படுத்துவதால் மனித நடவடிக்கைகள் இலகுவாகியுள்ள விதத்தை **இரண்டு** உதாரணங்கள் தந்து சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

(iii) தொழினுட்பத்தை முறையற்ற விதமாகப் பயன்படுத்துவதனால் சமூகத்தின் நல் நிலவுகைக்குப் பாதகமான செல்வாக்குகள் ஏற்பட்டுள்ள விதத்தை **மூன்று** உதாரணங்கள் தந்து விளக்குக. (05 புள்ளிகள்)

The National e-Learning Portal, The General Education

* * *